செய்தித் தாளாகப் பதிவு பெற்றது.

வெள்ளிக்கிழமைதோறும் வெளிவருவது

உ
சிவமயம்

# இந்துசாதனம்

சைவபரிபாலன சபை வெளியீடு.

பிரதி விலை: சதம் 15

ஆரம்பம்: விரோதி ஸு (1889) ஆவணி மீ 28-ம் உ  அச்சகம்: சைவப்பிரகாச அச்சியந்திரசாலை, 450 காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம்.  தொலைபேசி: 356

புத்-அ] யாழ்ப்பாணம்: பரிதாபி ஸு ஆடி மீ கஉ உ வெள்ளிக்கிழமை (28-7-1972) [இலை: கரு

## "வேதாகம இயக்கம்" உருவாகுதல் வேண்டும்

### சமயப் பிரசாரம் செய்பவர்கள் இன்று சிந்திக்க வேண்டியது இதுவாகும்

### இன்றைய கல்விமுறை நம் குழந்தைகளுக்கு போதிப்பது என்ன? இன்றைய தேவை எது?

[திருஞானசம்பந்தர் - பாதயாத்திரைச்சபையினர் சார்பாக சைவப்பேரறிஞர் திரு. மு. ஞானப்பிரகாசம், B. A. B Sc. (யாழ். திருநெல்வேலி, பரமேசுவரக் கல்லூரி முன்னாள் அதிபர் அவர்கள், நாயன்மார்கட்டு ஸ்ரீ இராஜராசேசுவரியம்பாள்கோவிலில் புராண படன ஆரம்பத்தில் சமர்ப்பித்த அறிக்கை]

வேதாகமங்கள் எங்கள் முதனூல்கள். அவற்றால் எமக்கு வந்து வாய்த்த ஆரிய பண்பாடு ஒன்றுளது. அந்தப் பண்பாடு வேதாகமப் பண்பாடு எனப்படும். அந்தப் பண்பாட்டின் உயிர்நாடிகள் இரண்டு. அவற்றுள் ஒன்று இயற்கையோடிசைந்த வாழ்வு. மற்றையது, இயற்கையோடிசைந்த கடவுள் நெறி. இந்த உண்மையை எம் இளஞ்சந்ததியினர் உணர்ந்தாற்றான், வருங்காலத்தில் வேதாகம நெறி இந்த உலகத்தில் நிலைக்கக்கூடிய ஒரு தகுதியைப்பெறும். இந்த நோக்கத்தின் பொருட்டே எங்கள் திருஞானசம்பந்தர் பாதயாத்திரைச் சபை சென்ற 16 ஆண்டுகளாகத் திருவருள் துணை கொண்டு இயங்கி வருகிறது.

இறைவன் சக்திமயமானவனென்பதும், இறைவனின் சக்தி வெள்ளம், காடுகள், மலைகள், வயல்கள், நீர்நிலைகள் போன்ற இயற்கை வலயங்களில் குதித்து விளையாடி விளங்குவதுபோல, மனிதனின் கைபட்ட இடங்களில் அத்துணை விளங்குவதல்லை என்பதும் வெளிப்படை. அதனாற்றான் வேதநூல் விதியில், இயற்கை வலயங்களில் வெளிப்பட்டுத் தோன்றும் இயற்கைச் சக்திகள் வணக்கமே மேலான வணக்கமெனக் கருதப்பட்டது. நிலத்தை வழிபடுவதும், நீரை வழிபடுவதும், சந்திர சூரியர்களை வழிபடுவதும் வேதநூற் பரப்பு முழுவதும் காணப்படுகின்ற அப்பழுக்கற்ற நேர்மையோடு நிகழ்ந்த வணக்கச் செய்திகளாகும். இந்த உண்மையை அநுசரித்தே சைவாகம நூல்களும் சிவபிரானுக்கு 8 இயற்கைத் திருமேனிகள் உளவென்றும், அவை பிருதுவி அப்பு, தேயு, வாயு, ஆகாயம், சந்திரன், சூரியன், ஆன்மா

(வளர்ச்சி 2-ம் பக்கம்)

## மாணிக்கவாசக சுவாமிகள் பற்றி மாணவர்கள் வழங்கிய கருத்துக்கள்

யாழ்ப்பாணம் சைவபரிபாலன சபையார் தரவல் சபைத் தலைவர் திரு. த. சோமசுந்தரம் தலைமையில் மாணிக்கவாசக சுவாமிகள் குருபூசை சிறப்பாக நடைபெற்றது.

விரிவுரைக் கூட்டத் தொடக்கத்தில் திருவாசக பாராயணத்தில் பெரும் ஈடுபாடுகொண்டவராகிய பெரியார் திரு ஆர். துரைச்சாமி அவர்கள் (பாவையம் பதியைச் சார்ந்தவர்) கேட்போருடைய உள்ளம் மகிழும் முறையில் திருவாசகம் ஓதினார்கள். அதையடுத்து

யாழ்ப்பாண மத்திய கல்லூரி மாணவர் செல்வன் ம. வாசுதேவன் "மணிவாசகரும் கள்வனும்" என்னும் பொருள் பற்றி ஒரு சிற்றுரைநிகழ்த்துகையில், "பண்டே ஆண்டவன் திருடாத ஒரு கள்வன். அடியார்களின் உள்ளங்களைத் திருடிவிடுகிறான்' இக்கள்வனைத் திருஞானசம்பந்தர் என் உள்ளம் கவர் கள்வன்' என்று பாடுகின்றார். திருநாவுக்கரசர் இக்கள்வன் மறைந்திருந்தாலும் ஒளிமயமானவன் என்னும் கருத்தில் "மறைய நின்றுள்ளான் மாயமணிச் சோதியான்" என்று கூறுகின்றார். மாணிக்கவாசகர் இக்கள்வன் எங்கெல்லாம் ஒளிந்திருக்கின்றான் என்பதை ஆராய்கின்றார்,

"திசைமுகன் சென்று தேடினர்க் கொளித்தும் ......... என்றெல்லாம் கூறி இக்கள்வனைத் 'தலைப்பிடுமின்' (கட்டுங்கள்) என்றும் கூறுகின்றார். இக்கள்வனே "எமது உள்ளங்களையும் கவர்வானாக" என மொழிந்தார்.

யாழ்ப்பாண மத்திய கல்லூரியிற் பயிலும் இன்னொரு மாணவன் செல்வன் வ. திருச்செல்வம் 'திருவாசகத் தேனின் சில துளிகள்' வழங்கினார். தேன், போசசப் பழம் பண்டு பொருள்களைக் கெடமற் பாதுகாப்பதுபோலத் திருவாசகமும் அதனோடு தொடர்புகொள்வோரைக் காக்கின்றது. தமிழ் வைத்திய முறைப்படியும் தேன் பல நோய்களுக்கு மருந்தாகின்றது. திருவாசகமும் ஆன்மாவைப் பற்றும் நோய்க்கு மருந்தாகின்றது. அரசவையை விட்டுநோக்கி மாணிக்கவாசகர் 'வாடுகின்ற மலர்போல தேன் உண்ணுமல் எலும்பு முழுதும் உள்ளே மகிழும்படி ஆனந்தத்தேனைச் சொரியும் பெருமானைப் பாய் ஊதுவாயாக' என்று சொல்கின்றார். திருவாசகத்தேனில

உ
திருச்சிற்றம்பலம்

மூவாய் பிறவா யிறவாய் போற்றி
முன்னமே தோன்றி முளைத்தாய் போற்றி
தேவாதி தேவர் தொழுந் தேவே போற்றி
சென்றேறி யெங்கும் பரந்தாய் போற்றி
ஆவா வடியேனுக் கெல்லாம் போற்றி
அல்லல் நலிய வலந்தேன் போற்றி
காவாய் கனகத் திரளே போற்றி
கயிலை மலையானே போற்றி போற்றி

திருச்சிற்றம்பலம்
- திருநாவுக்கரசுசுவாமிகள்

## யாழ்ப்பாணம் சைவபரிபாலன சபை

### தேவாரத் திருமுறை வகுப்பு

திருவருளை முன்னிட்டு ஆவணி மீ ருஉ (20-8-72) ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு தேவாரப்பண்ணிசை வகுப்பொன்றை சைவபரிபாலன சபையார் நல்லூர் வீதி நாவலர் ஆச்சிரம மண்டபத்தில் திருமுறைப் பண்ணிசைமணி மெய்கண்டாராதீனத் தேவார இன்னிசைச் செல்வன் திரு. பி. ஏ. எஸ். இராஜசேகரன் அவர்களிடம் ஐந்து ஆண்டுகளாக திருமுறைப் பயிற்சி பெற்ற இசையாசிரியர் சங்கீத பூஷணம் திரு. வல்லிபுரம் பரமசாமி அவர்கள் ஆரம்பித்து ஞாயிற்றுக்கிழமை தோறும் நடத்துவார்கள். வகுப்பிற் சேர்ந்து படிக்க விரும்புவோர் எம்முடன் தொடர்பு கொள்வார்களாக.

மு. மயில்வாகனம்
சமயப்பிரசார அமைச்சர்

## நல்லூர் கந்தசுவாமி கோவில் மகோற்சவம்
### 14-8-72 திங்கட்கிழமை ஆரம்பம்
### விசேட உற்சவ தினங்கள்

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 14-8-72 | ஆடி 30 | திங்கள் | கொடியேற்றம் | பகல் 12 மணி |
| 22-8-72 | ஆவணி 7 | புதன் | மஞ்சம் | இரவு 8 மணி |
| 30-8-72 | ஆவணி 14 | புதன் | கார்த்திகை உற்சவம் | இரவு 8 மணி |
| 1-9-72 | ஆவணி 16 | வெள்ளி | கைலாசவாகனம் | இரவு 8 மணி |
| 4-9-72 | ஆவணி 19 | | தண்டாயுதபாணி உற்சவம் | மாலை 4 மணி |
| 5-9-72 | ஆவணி 20 | செவ்வாய் | சப்பரம் | இரவு 8 மணி |
| 6-9-72 | ஆவணி 21 | புதன் | தேர் | காலை 8 மணி |
| 7-9-72 | ஆவணி 22 | வியாழன் | தீர்த்தம் | மாலை 4-30 மணி |
| 8-9-72 | ஆவணி 23 | வெள்ளி | பூங்காவனம் | மாலை 6.30 மணி |

## தவவாழ்க்கைக்கு சிகரமாக விளங்கிய மடாதிபதி

### சைவபரிபாலன சபையில் அனுதாபம்

[காசிவாசி ஸ்ரீலஸ்ரீ அருள்நந்தித் தம்பிரான் சுவாமிகள் பரிபூரணம் எய்தியதைக் குறித்து யாழ்ப்பாணம் சைவபரிபாலன சபை சென்ற 25-7-72 இல் திரு. த. சோமசுந்தரம் அவர்கள் தலைமையில் நடைபெற்ற கூட்டத்தில் நிறைவேற்றிய அனுதாபத் தீர்மானம்:]

பரிதாபி ஸு வைகாசி வளர்பிறைச் சஷ்டித்திதியிலன்று வாரணாசியில் சேக்கிழார் குருபூசைத் தினத்திலன்று திருப்பனந்தாள் ஸ்ரீ காசிமடத்தது 20 ஆவது பட்டத்தில் எழுந்தருளியவர்களும் வாரணாசி ஸ்ரீலஸ்ரீ குமரகுருபர சுவாமிகள் மடத்துத் தலைவருமாகிய ஸ்ரீலஸ்ரீ அருணந்தித் தம்பிரான் சுவாமிகள் அவர்கள் பரிபூரணமெய்திய செய்தியைக் குறித்து இச்சபை தனது அனுதாபச் செய்தியைத் தெரிவிக்கின்றது. சுவாமிகள் அவர்கள் தவம், அடக்கம், பொறுமை, முதலிய நற்பண்புகளுக்கு இருப்பிடமாகத் திகழ்ந்து விளங்கிச் சைவமும், தமிழும் தழைத்தினிதோங்க அளப்பரிய தொண்டுகள் செய்துள்ளனர். இமயம் முதல் குமரி வரை மக்கள் உடல் உள்ளம் பண்படைய எத்தனையோ அறக் கட்டளைகளை நிறுவினர்கள். தேவாரப்பாடசாலைகளை நிறுவியும் சைவத்தெய்வத் திருமுறைகளின் பெருமையின் திருவிழாக் காலங்களில் ஆலயங்களில் திருமுறைவாணர்களை அழைத்து திருமுறைப்பாராயணஞ் செய்யவும் ஏற்பாடு செய்தார்கள்.

தீர்மானம் நிறைவேற்றிய பின் சுவாமிகளுடைய ஆன்மா எல்லாம்வல்ல இறைவன் திருவடி நீழலில் பேரா இன்ப நிறைவோடு அமர்ந்திருக்க அருள் செய்யுமாறு பிரார்த்தனை செய்து இரண்டு நிமிட மௌனம் அனுட்டிக்கப்பெற்றது.

## பதவி உயர்வு

கல்வி அமைச்சின் தமிழ் அதிகாரி திரு. மாணிக்கவாசகரும், யாழ்ப்பாணப் பிரதம கல்வியதிகாரி திரு எஸ். கனகசபாபதியும் விசேடதரப்பதவிக்குப் பதவி உயர்வு பெற்றுள்ளனர். அடுத்தமாதம் முதலாந் திகதியிலிருந்து இம்முடிவு நடைமுறைக்கு வரும்.

இத்தகைய பல துளிகளைப் பருகலாம்" என ஆயபாணவர் தமது சிற்றுரையிற் குறிப்பிட்டார். மூல.

வளர்ச்சி 4-ஆம் பக்கம்)

## ச. குமாரகுலசிங்கம் B. A. அவர்கள்

காலஞ்சென்ற பிரபல ஆசிரியரும், ஆங்கில இந்துசாதனப் பத்திராதிபராகக் கடமையாற்றியவருமாகிய திரு. மு. சபாரத்தினசிங்கம் அவர்களின் நான்காவது புதல்வன் திரு ச. குமாரகுலசிங்கம் B. A. அவர்கள் சென்றவாரம் கொழும்பு மாநகரில் சிவபதமடைந்துவிட்டனர். இவர் யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியில் கல்வி பயின்று, பேராதனைச் சர்வகலாசாலையில் கல்வி பயின்று B A பட்டம்பெற்றவர். யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியிலும், புத்தூர் சோமாஸ்கந்த வித்தியாலயத்திலும் ஆசிரியராகக் கடமையாற்றியவர். இந்துசாதனம் தமிழ் - ஆங்கில பிரசுரங்களுக்கு விஷயதானம் செய்து வந்தவர். அவர் கல்வி, பொருளாதாரம், அரசியல், சரித்திரம் சம்பந்தமாக சிறந்த கருத்துக்களமைந்த கட்டுரைகளை ஆங்கிலத்திலும், தமிழிலும் சிறந்த நடையில் எழுதியுள்ளனர். இவருடைய கட்டுரைகள் பலவராலும் மோசப்பெற்றன. அன்னாரின் பிரிவு எமது நாட்டிற்குப் பேரிழப்பாகும்.

திருச்சிற்றம்பலம்
வாழ்க அந்தணர் வானவரானினம் வீழ்கதண்புனல் வேந்தனுமோங்குக
ஆழ்க தீயதெல் லாமர னாமமே சூழ்க வையகமுந் துயர் தீர்கவே.
திருச்சிற்றம்பலம்

# இந்துசாதனம்

பரிதாபிஞு ஆடி மீ கஉ-உ வெள்ளிக்கிழமை [1972]

## இயற்கைநெறியான சிவவழிபாடு

சென்ற 22—7—72 சனிக்கிழமை திருஞான சம்பந்தர் பாதயாத்திரைச் சபையினர் நல்லூர்க் கந்தசுவாமிகோவிலில் பிற்பகல் ஐந்துமணியளவில் வழிபாடாற்றிக்கொண்டு திருக்கேதீச்சர பாதயாத்திரையைச் சைவப்பெரியார் திரு. மு. ஞானப்பிரகாசம் அவர்கள் தலைமையில் ஆரம்பித்து, நாயன்மார்கட்டு ஸ்ரீ இராஜ ராஜேஸ்வரியம்பாள் கோவிலில் வழிபாடாற்றி, பெரிய புராணம் - திருஞானசம்பந்தர் புராண படனத்தை ஆரம்பித்தார்கள். ஷை சபையார் வெளியிட்ட "வேதாகம இயக்கம்" என்ற தலையங்கத்தையுடைய அறிக்கையொன்று அங்கு கூடியிருந்த அடியார்களுக்கு வழங்கப்பெற்றது. அக்கட்டுரையில் வேதாகமங்கள் இயற்கையோடிசைந்த கடவுள் நெறியையே வறபுறுத்துகின்றனவென சுட்டிக் காட்டப்பட்டிருக்கின்றது.

மரத்தை மறைத்தது மாமத யானை
மரத்தின் மறைந்தது மாமத யானை
பரத்தை மறைத்தது பார்முதற் பூதம்
பரத்தின் மறைந்தது பார்முதற் பூதமே.

மரத்தாற் செய்யப்பெற்ற யானையின் உருவத்தை யானையென்று மதித்துப் பார்வையிடும்பொழுது மரம் என்ற எண்ணம் மறைந்துவிடும். மரம் என்று எண்ணும்பொழுது யானையென்ற எண்ணம் மறைந்துவிடும். அதேபோலப் பஞ்சபூதங்களாலமைந்ததும் இறைவனுக்கு உடலாகவிருக்கும் உலகைப் பஞ்சபூதமாகப் பார்க்கும்பொழுது இறைவன் மறைந்து விடுவான். உலகை இறைவனுக எண்ணும்பொழுது பஞ்சபூதமும் மறைந்துவிடும். உலகை இறைவன் திருமேனியாகக் கருதி வழிபடுவதே இயற்கை நெறியான சிவ வழிபாடாகும். பாத யாத்திரை செய்கின்ற பெருந்தவி இயற்கை நெறியான வழிபாட்டு முறையை உலகிற் பரப்புவதாகும்.

உயர்தரவகுப்பு மாணவர்கள் விஞ்ஞானப் பகுதிப் பாடங்களை இருவிதமாகப் படிப்பார்கள். முதலாவது அப் பாடத்துக்குரிய உண்மைகளைப் போதனையாகக் கற்றுக்கொள்வது. இரண்டாவது அம்முறைகளை ஆய்வுகூடத்திற் செய்கை முறையாகக் கற்றுக்கொள்வது. செய்கை முறைக் கல்வி அவர்களுடைய கல்வியைப் பூரணப்படுத்தும். பாதயாத்திரை இடக்கம் ஆய்வுகூட ஆராய்ச்சியைப்போல கடவுள் நெறியைச் சாதனை மூலம் மக்களுக்குப் புகட்டுகின்றதை நாங்கள் நினைவுகூரவேண்டும்.

இறைவனை அட்டமூர்த்தமாக வழிபடுவது இவ்வுண்மையையுணர்த்தவேயாகும். பிருதிவி, அப்பு, தேயு, வாயு, ஆகாயம், சூரியன், சந்திரன், ஆன்மா என்ற உறுப்புக்களையும் கொண்டதே அட்டமூர்த்தம். பள்ளிக்கூட மாணவர்களை இத்தகைய பாதயாத்திரையிற் சைவப் பெரியார் திரு. மு. ஞானப்பிரகாசம் போன்றவர்களுடைய தலைமையில் ஈடுபடச் செய்வது அவர்களுக்கு உண்மையான கடவுள் நெறியைக் கற்பிப்பதற்குச் சிறந்த வழியாகும். இப்பாத யாத்திரையினல் யாத்திரை செய்பவர்களும் நன்மையடைகின்றனர்கள். யாத்திரை செய்பவர்களை அவர்கள் செல்லும் மார்க்கத்தில் உபசரிக்கின்ற மக்களும் நன்மையடைகின்றனர்கள். சிவனடியாரைச் சிவன என மதிக்கும் எண்ணமும் காண்பன வெல்லாம் சிவமே என்ற எண்ணமும் உதிக்கும், சர்வம் சிவமயம் என்பதை உணர்வதே இயற்கை நெறியான வழிபாடாகும்.

இவர்கள் தங்கும் இடங்களில் பெருந்தொகையான அடியார்கள் கூடுகின்றனர்கள். ஆங்கெல்லாம் பிரார்த்தனை, புராணபடனம், சமயப்பிரசாரம் என்பன இவர்களால் நடாத்தப்பெறுவது பாராட்டுக்குரிய ஒன்ருகும். இப் பாத யாத்திரை கடந்த 16 ஆண்டுகளாகத் தொடர்ந்து நடைபெற்று வருகிறது என்பதையும், இதிற் செல்லும் அடியார்களுட் பலர், சிவ திட்சைப் பேறுடையவர்களாயும், சிவனடியார்களை மதிப்பவர்களாயும், சிவதொண்டர்களாயும் விளங்குகின்ருர்கள் என்பதையும் அறிந்து பெருமகிழ்ச்சியடைகின்றேம் எதிர் காலத்திலும் இந்தப் பாதயாத்திரை புதுப் பொலிவுடன் விளங்கத் திருக்கேதீச்சரப் பிரபுவை மனம் மொழி மெய்களால் வழுத்துகின்ருேம்.

# இறையருள்

திரு. சோ. க. வேலாயுதர் அவர்கள்

இன்றையவிஞ்ஞான உலகிலே மக்கள் எதனையும் ஆர அமர யோசித்து நன்கு செய்ய நேரமின்றி அவதியுறுகின்றனர். இந்த கால கட்டத்திலே வாழுகின்ற மனிதன் எல்லாம் தன் செயலே என்று பித்தம்பிடித்தலைகின்ருன்.

"தெய்வம், தெய்வச் செயல் அற்புதம் என்றதெல்லாம் மாயச் சொற்கள், இவை பிரத்தியட்சமாகக் காணக்கூடியனவா, காணக்கூடாதனவற்றைப் பற்றி ஏன் மனிதர் பேசவேண்டும். காணுகின்ற உலகம், அதிலே காணப்படுகின்ற இன்பம் பயக்கின்ற பொருள்களைப் பற்றி யாருரே பேசவேண்டும் எழுதவேண்டும் சிந்திக்க வேண்டும்' என்று கூறுகின்றனர் அறிவு படைத்தவரெனப்படும் அறிஞர். இவற்றைப் பற்றியும் அறியத்தான் வேண்டும். இவை நிரந்தரமானவையா? நிலையிலாதனவற்றை நிலையானவை என்று எண்ணுவது அறிவுடைமைதானு? சீறுச் சிந்தியுங்கள்.

சித்தத் தெளிவெயதாத சிறுமையாளர் தாம் இனறு இறைமையை இகழ்கின்றனர். இறைவனேயென்று ஒரு பொருள் இல்லையெனறு மறுக்கின்றனர். மறுப்பார்க்கும் இறைவன் இறைவனே. இதனையே அப்பரடிகளும்,

"இருள் தரு துன்பப்
படலமறைப்ப மெய்ஞ்ஞான
மெனும்
பொருள் தரு கண்ணிழந்
துனபொருள் நாடிப்
புகழிழந்த
குருடருந் தம்மைப் பரவக்
கொடுநரகக் குழிநின்
றருள் தரு கைகொடுத
தேற்று மையாறன்
அடித்தலமே"

என்று கூறியுள்ளார். காமக் குரோதிகளாற் கலங்கிய சிந்தையுளார் தாம் எத்தனையோ உலகங்களையும் உயிர்களையும்படைத்தழித்துக் காக்கின்ற இறைவனை இகழ்வர். இவர் தமமையே திருமூலர் "நீசர" என மனம் வெதும்பி மாற்றஞ் செய்தனர்.

"எளியனென்று ஈசனை நீசர் இகழின்" என்ற திருமந்திர அடிகள ஊன்றிச் சிந்திக்கறபாலன.

மெய்ஞ்ஞானியான, இகழும் புகழும் ஒபபக்காணும ஒண்ஞானியான திருமூலரே 'நீசர்' என்று மனம் புழுங்கிக் கூறின், அறிவாற்றலற்ற, பஞ்சப்புலன் வழி செல்லும் மனமுடைப் புல்லறிவாளர்களாகிய நாம் என்ன சொல்லைதான் உபயோகிப்போமோ என்று ஆராய்மின்.

தெளிந்த சிந்தையுள்ள ஞானிகளுக்கு இறைவன் அன்பு மயயாக இருப்பான். அவ்வன்பே சிவமாவது. அப்பொழுது அவர்கள சிவமயமாகவே தோற்றப்படுவர்.

"அன்புஞ் சிவமும்
இரண்டென்ப ரறிவிலார்
அன்பே சிவமாவ
தாரு மறிகிலர்
அன்பே சிவமாவதாரு
மறிந்தபின்
அன்பே சிவமாய் அமர்ந்திருப்
பாரே." -திருமந்திரம்

இறைவன் ஆன்மாக்களின் உளளங் கலந்து அங்கேயுயிர்க்குயிராய் விளங்குகின்ருன். நம் உள்ளங்களை தூய்மை செய்து வெள்ளையுள்ள மாக்கினலன்றி அவன் அங்கு உறையமாட்டான். இறைவனிலே நம்பிக்கை வைத்து மெய்தானரும்பி விதிர் விதிர்த்து கண்ணீர் ததும்பி உளளம் பொய் தான் தவிர்ந்து உளமார நினைந்தாலே தோன்றுவான்.

இறைவனை எங்கே காணலாம். எங்கும் தேடித்திரிந்தாலும காண முடியாதவன் அவன வெளியிலே உருவத்திருமேனியைக் காண நாம படுமபாடு எவ்வளவு. அவனை காணக்கூடிய இடமதான என்ன? எமது முதுபெரும் உழவாரப் படைத் தலைவன் தேடிக்கண்டு

வளர்ச்சி 8-ம் பக்கம்

## வேதாகம இயக்கம் உருவாகுதல்வேண்டும்

(1- ஆம் பக்கத்தின் வளர்ச்சி)

ஆகிய எட்டுமே என்றும் கூறி, அவற்றை நாங்கள் முதற்கண் வணங்கப் பழகிக்கொள்ளுதல் வேண்டுமென விதித்தன.

இக்காலத்தில், இலங்கை, இந்தியா போன்ற எங்கள் நாடுகளில் சமயப் பிரசாரம் செய்பவர்கள், இறைவனின் சக்தி வெள்ளம் மிக மிக வெளிப்பட்டுத் தோன்றும் இயற்கை வலயங்களைச் சிறிதேனும தம் உள்ளத்தில் வைத்துச் சிந்திக்க இயலாதவராய் இருக்கின்றனர். ஒவ்வொரு மான அபிமான நிலையை வைத்துக்கொண்டு 'மனிதன்' 'மனிதன்' என்று ஒரு போலி வடிவத்தையே கற்பித்துக்கொண்டு, அது உண்டுடுத்து வாழுதற்குரிய செய்திகளையே சமயப் பிரசாரம் என்ற போர்வைக்குள் மறைந்து நின்று பிரசாரம் செய்து வருகின்றனர். இந்த நிலையை மாற்றி அமைப்பதற்கு எல்லாம்வல்ல, அந்த முழுமுதலிறைவன்தான் திருவுள்ளம் கொள்ளுதல் வேண்டும். வேதாகம நெறியை வாழையடி வாழையாகப் பிடிபற்றி வாழும் எல்லாத் தலைமுறையினரையும் எல்லாக் காலங்களிலும் இயற்கையோடு இசைவித்து வைக்கவேண்டும் என்ற பெருங் குறிக்கோளினலன்ரே 'மிருத்சங்கிரகணம்' என்றும், மண்வெட்டுதல் என்றும், அங்குரார்ப்பணம் என்றும், முளைப்பாலிகை வளர்த்தல் என்றும், பாலபிஷேகம் பஞ்சகவ்விய அபிஷேகமென்றும், பஞ்சாமிர்த அபிஷேகமென்றும், அரிசித் திருவமுது நைவேத்தியமென்றும், பால்பழ நைவேத்தியமென்றும் பற்பல அற்புதமான கிரியைகளை எம்முன்னேர் எங்கள் கோயில் நெறியில் ஏற்படுத்தி வைத்தனர். எம் முன்னேரின் சுத்த சத்வமான தூரதிருஷ்டிச் சிறப்பு நிலை என்றென்றும் வாழ்க என வாழ்த்துகின்ருேம்.

எங்கள் கோயில்களில் நாங்கள் எல்லோருந் தான் இயற்கையோடிசைந்து வாழ்பவர் போல் நடித்து, அபிஷேகங்கள், நைவேத்ய பூசைகள் செய்கின்ருேம்; செய்விக்கின்ருேம் அவ்வாறு செய்யும் நாங்கள், சிவபிரான் தந்த இயற்கைச் செல்வத்தைச் சிவபிரானுக்கே அர்ப்பணிக்கின்ருேம் என்ற அர்ப்பண உணர்வோடு அவற்றைச்செய்யவும் செய்விக்கவும் முயலுதல்வேண்டும். அப்பொழுதுதான் அச் செய்கைகளால் வரக்கூடிய இகபர பலாபலன்கள் எங்களை வந்து அடையும்.

வேதாகம நெறி — தனக்கே உரிய பழைய இயற்கை எழிலுடன் மீண்டும் சிறக்க வேண்டுமெனில், வேதாகம மிஷன் (Vedagamic Mission) என்ற பெயருடன் இயற்கைத் திருநெறி இயக்கம் ஒன்று எம மத்தியில் திருக்கேதீஸ்வரம் போன்ற ஒரு தலத்தைக் கேந்திரமாகக் கொண்டு உருவாதல் வேண்டும. அஃதன்றியும் எங்கள் நாட்டில் நிலவும் தற்காலக் கல்வி முறையும், இயற்கை வாழ்வையே — தாயக நிலப்பற்றையே — பூமிச் செல்வத்தையே — தாரகக் கோட்பாடாகக் கொண்ட பயனுள்ள ஒரு கல்வியாக உருப்பெறுதல் வேண்டும். இவை இரண்டையும் நிறைவேற்றி வைக்குமாறு கௌரியம்பாள் சமேத திருக்கேதீஸ்வரப்பெருமானின் செங்கமலப்போதனைய திருப்பாதங்களுக்கே முறையிட்டு வாழ்வோமாக. மிக மிகப் பெரியனவாய், மிக மிகப் பழையனவாய், பரம்பரையில் நின்ற எங்கள் தனிப் பெருஞ் செல்வமாய் வாய்த்த அந்தத் திருப்பாதங்கள் — பல நூற்ருண்டுகள் தோன்ருது மறைந்து கிடந்த அந்த அற்புதப் பாதங்கள் — எம்மையெல்லாம் வேதாகம நெறியிலும் இயற்கை வாழ்விலும் வளர்த்தெடுக்கவிரும்பி — இந்நாளில் — எம் மத்தியில் — திருக்கேதீஸ்வரப் பதியில் புதுச் சலங்கைகள் தரித்துப் புதுப் பொலிவுகளிற் சிறந்து ஆண்டருளும் அருட்கோலத்துடன் எழுந்தருளி வந்து புது ஒளிகளைப் பரப்பி நிற்கின்றனவன்ரே!

திருஞானசம்பந்தர் - பாதயாத்திரைச் சபையினர்
நல்லூர், யாழ்ப்பாணம், 10-7-72.

## கல்விச் சுற்றுலா

கோண்டாவில் பரஞ்சோதி வித்தியாசாலையில் கல்விபயிலும் மாணவர்களுள் அறுபதின்மரும் ஆசிரியர்கள் சிலரும் தலைமையாசிரியர் தலைமையில் யாழ்ப்பாணக் குடாநாட்டில் கல்வி, கைத்தொழில் சம்பந்தமான முக்கிய இடங்களைப் பார்வையிடுவதற்காக 28-7-72 வெள்ளிக்கிழமை (இன்று) கல்விச் சுற்றுலா ஒன்றினை மேற்கொண்டுள்ளனர்.

(நமது நிருபர்)

## இறையருள்

2ம் பக்கத் வளர்ச்சி

கொண்டதை எமக்குச் சொல்லுகின்றன், கேளுங்கள்.

"தேடிக் கண்டு கொண்டேன்
திருமாலொடு நான் முகனும
தேடித் தேடொணுத் தேவனை
யென்னுள்ளே தேடிக்
கண்டு கொண்டேன்"
என்கின்றனல்லவா.

உள்ளத்திலே இறைவனைக் கண்டால் புறத்திலும் இறைவனைக் காணலாம. உள்ளத்திலுமில்லை புறத்திலுமில்லை எனனும நாததிகருக்கு உள்ளத்திலுமில்லை புறத்திலுமில்லை எனகிறது திருமந்திரம்:

"உள்ளத்தும் உளளன்
புறத்துள்ளன் என்பவர்க்கு
உள்ளததும் உள்ளன்,
புறத்துளளன் எம் இறை
உள்ளத்தும் இல்லை,
புறத்திலே என்பவருக்கு
உள்ளத்தும் இல்லை
புறத்திலை தானே"

ஓம் சிவம்,
சாந்தி. சாந்தி. சாந்தி

—

### கோட்டு விற்பனவு விளம்பரம்

வழ: இல. M B 4900

1. முருகேசு சண்முகமும் பெண
2. பரமேஸ்வரியும் இருவரும் வலந்தலை, காரைநகர் வடக்கு காரைநகர்

—வழக்காளி

எதிராக

தர்பையா பதமநாதன், பட்டின சபை விடுதி, ஏருவூர், செங்கலடி. என்பவர் காலஞ்சென்ற கணபதிப்பிள்ளை தயபையாவும் பெண் பொன்னம்மா இருவரும், பிறவுண் வீதி, வண்ணார்பண்ணை கிழக்கு, யாழ்ப்பாணம. பின் சடடப்படி பிரதிநிதியாகவும், தனக்காகவும

— எதிராளிகள

யாழ்ப்பாணம் மாவட்டக்கோடடின் M B 4900 -ம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி பின்னுல் விபரிக்கப்படும் துண்டுக காணி 1972ம் ஸு ஆவணி மாதம 15-ந் திகதி(15-8-72)செவ்வாய்க் கிழமை முற்பகல் 10-30 மணி தொடக்கம அந்தக் காணிக்குள் நின்று பிரசித்த ஏலததில் விற்கப்படும்.

தீர்வைத்தொகை: முதல்வட்டி வட்டி ரூபாய் 3173/-ம், 25-6-62 தொடக்கம் 11-11-62 வரைக்கும் ரூபாய் 2250/-க்கு 12 வீத வட்டியும் அதனபின முழுத்தொகைக்கும் இறுக்கும் வரை 5 வீத வட்டியும கோட்டுச் செலவு ரூபாய் 231-90

ஆதன விபரம்

வடமாகாணம் யாழ்ப்பாணம் மாவட்டமும் பிரிவும் வண்ணார் பண்ணை கோவிற்பற்று வண்ணார் பண்ணை கிழக்கு 'நாரியன் குண்டு' நி. பர. 3(மூன்று) குளி13, 13/ 6 (பதிமூன்றும, பதினறில் பதிமூனறும், பயிர்களும, 4 குளி கொண்ட கையொழுங்கையில் பங்கும், இந்தக் காணியிலிருந்தும் கிழக்காலில காணிகளிலிருந்தும் வடக்கு ஒழுங்கைக்கு போதற்குரித்தும், வடக்குக் கையொழுங்கையில் பங்கும் டெகக்கு காணிககுள் இருக்கும் கிணற்றில தண்ணீர்ப் பங்கும். சொல்லப்பட்ட கையொழுங்கை பககத்தால் வழிவாய்க்கால் பாவிப்புரிததும் இககாணி நி. பர. 3 குளி 13, 13/16 எல்லை கிழக்கு கணபதி மாணிக்கத்தின் ஆதனம். வடக்கு சொல்லப்பட்ட 4 குளி; கையொழுங்கை. மேற்கு நாகமணி பெண தங்கத்தின் ஆதனம் தெற்கு சின்னததம்பி கந்தையாவின் ஆதனம. இதடங்கலும்

S. சங்கரப்பிள்ளை J. P.
கொமிஷனர், விலைமதிப்பாளர்
'வேல்பதி" புத்தூர்
14-7-72 எ. 175—72

---

### கோட்டு விற்பனவு விளம்பரம்

விசுவலிங்கம் குகதாசன், மல்லாகம் தற்பொழுது 3ம் குறுக்கு தெரு, யாழ்ப்பாணம். —வழக்காளி,

வழக்கு இல. M. B. 11693 எதிராக

1. சுப்பிரமணயம் கனகசபை (இறந்துவிட்டார்)
2. பெண நாகம்மா, 478/5, கனகசபை அவெனியூ வண்ணார்பண்ணை, யாழ்ப்பாணம். இரண்டாம் எதிரி தனித்தும் காலஞ்சென்ற முதலாம் எதிரியின் ஆதனங்களின் பிரதிநிதியாகவும் — எதிராளிகள்

யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கோட்டின் M B 11693ம் இலக்க வழக்கில் எனககுக் கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி பினனுல் விபரிக்கப்படும் இரண்டு துண்டுக்காணிகளை 1972ம் ஸு ஆவணி மீ 17-ந்திகதி (17-8-72) வியாழக்கிழமை முற்பகல்10மணி தொடக்கம் அந்தந்தக்காணிகளுக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

தீர்வைத்தொகை: முதல் வட்டி ரூபா 24,657/—ம், 15-5-70 தொடக்கம் 7-10-71 வரைக்கும் ரூபா 15000/-க்கு 7 வீத வட்டியும் அதன்பின் முழுத்தொகைக்கும இறுக்கும் வரை 5 வீத வட்டியும் கோட்டுச் செலவு ரூபாய் 83?-76

ஆதன விபரம்

1. வடமாகாணம் யாழ்ப்பாணம டிஸ்திறிக் யாழ்ப்பாணப் பகுதி வண்ணார்பணணை கோவிற்பற்று வணணார்பணணை தென் மேறகிறை "முததவன வயல" நெ. பர. 2 குளி 8 'சிதம்பரநாத கிரி" என றழைககபபடும் கட்டிடங்கள். இதில் தென் கிழக்குப் பக்கமாக காங்கேசன்துறை வீதி. யாழ் மாநகரசபை இலக்கம 33 கொண்ட பண்டகசாலைக் கட்டிடம் மேல்வீடும் அதன் கிழக்கு மேற்கு விருந்தைகளும். பின் முற்றததிலிருக்கும கிணற்றுககும மலசலகூடததுக்கும் வடக்கேயிருக்கும நடைபாதையால் போககு வரவுசெய்யும உரித்தும், மேறகே இருககும் உளமுற்றமும் இதன் கீழ விபரிககப்படும் இரண்டாம் கட்டிடததின் மேறகுப் பக்கமாக சேர்ந்திருக்கும நடை பாதையும் ஆஸ்பத்திரி வீதியிலிருந்து கிணற்றுககு விடப்பட்ட பாதையால் போக்குவரவுசெய்யும் உரிததும் 33ம் இலக்கம் கொண்ட குறித்த பண்டகசாலை வடக்குத தெற்கு 12 அடியும், கிழககு மேற்கு 41 அடியும் குறித்த கிழக்கு மேறகு விருந்தைகளும் உட்பட குறித்த காணிக்கும கட்டிடங்களுக்கும் எல்லை கிழக்கு காங்கேசனதுறை வீதி, வடக்கு பசுபதி செட்டியாருக்குரிய நடைபாதை, மேற்கு கீழே தறிக்கப்படும் காணியும், குறிதத பசுபதி செட்டியாருககுரிய உள் முற்றமும். தெற்கு P. சிதமபரநாத செட்டியாருக்குரிய ஆதனம,

பதவு இல: D 2?4/266

2. ஷெ 'முத்தவன்வயல" நெ பர 2 குளி 8 "சிதம்பரநாதகிரி" கட்டிடங்கள் பதிவு இல: D ?04/298 இதில் உள விருந்தைகள். கிழக்கே இருக்கும் காஙகேசன்துறை வீதிக்கும். பின் முற்றத்திலிருககும் கிணறறுக்கும் மலசல கூடத்துக்கும் முறையே மேறகு நடைபாதையாலும உள்முற்றத்தாலும கிழக்கு நடைபாதையாலும் போக்குவரவு செய்யும் உரிததும குறித்த கிணற்றுககும் மலசல கூடத்துககும ஆஸ்பத்திரி வீதியிலிருந்தும், உள் விருந்தையிலிருந்தும் விடப்பட்ட பாதையால போககுவரவு செய்யவும். வடக்கு தெற்கு 9 அடி கிழக்கு மேற்கு 30 அடி தற்பொழுது அளவின்படி வடக்கு தெற்கு 9 அடி கிழக்கு மேற்கு 34 அடி எல்லை கிழககு மேலே குறிபபிட்ட ஆதனம வடக்கு உள் முற்றமும். பசுபதி செடடியாருக்குரியம், மற்றொரு விருந்தையும் மேற்கு குறித்த கிழக்கு நடைபாதையும் சிதம்பரநாத செட்டியாருக்குரிய ஆதனமும். தெறகு P. சிதம்பரநாதசெட்டியாருக்குரிய ஆதனம. பதிவு இல: D 165/43

22, கோவில் வீதி
யாழ்ப்பாணம்.

நீ. அன்ரனிப்பிள்ளை
கொம்மிஷனர் & விலைமதிப்பாளா
எ. 172—28-7-72

---

### கோட்டு விற்பனவு விளம்பரம்

யாழ்ப்பாணம். வைமன் ரேட், அரியகுட்டி பொன்னையா மகள் ஜெயதேவி —வழக்காளி

வழக்கு இல: M B 12333 எதிராக

யாழ்ப்பாணம. வீட்டு இலக்கம் 349, காங்கேசன்துறை வீதி வயித்திலிங்கம் செல்லையா —எதிராளி

யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கோட்டின் M B 12333-ம் இலக்க வழக்கில எனககுக் கிடைதத கோட்டுக்கட்டளைப்படி பினனுல் விபரிக்கப்படும இரு துண்டுக் காணிகளையும 1972-ம் ஆண்டு ஆவணி (ஆகஸ்ட) மீ 29-மதிகதி (29-8-72) செவ்வாய்க்கிழமை முறபகல 10 மணி தொடக்கம் அந்தந்தக காணிகளுக்குள் நினறு பிரசித்த ஏலததில் எனனுல விற்கபடும்,

தீர்வைத்தொகை:— முதலவட்டி ரூபா 13,583/—ம் 28-2-71 தொடககம 9-11-71 வரைக்கும் ரூபா 10000/—க்கு 10 வீத வட்டியும் அதன் பின் முழுத் தொகைக்கும் இறுக்கும்வரை 5 வீத வட்டியும கோடடுச் செலவு ரூபா 514 சதம் 53. அதாவது ஏற்பட்ட செலவு ரூபா 32? சதம் 89. வெளியாத்துச் செலவு ரூபா 111 சதம் 67. இனிமேல் வரும செலவு ரூபா 78 சதம் 9?ம்.

ஆதன விபரம்

1-ம் காணி;— வடமாகாணம யாழப்பாணம் டிஸ்திறிக்கும் டிவிஷனும் வணணார்பணணை கோவிறபற்று வண்ணார்பணணை வடமேறகு இறை, வீடும் செய்பயிர் வான் பயிர்களும "பன்றிக் காட்டு வழவு" என்னும் பெயருடைய காணி. பாப்புநிலம் 4ம்3/16 இலச்சமும் இதில சொரியலாக மூன்றில் ஒருபங்கும். (1 3 share) எல்லைகள:— கிழக்கு :- கிளை ஒழுஙகை, வடக்கு :- ஒழுஙகை மேறகு :- நாகலிஙகம் சுப்பையாவின ஆதனம், தெற்கு :- நாகப்பர் இராமுப்பிள்ளையினுடையதும் நாகலிங்கம் சுபபையாவினுடையதும ஆதனம்.

2ம காணி: ஷெ வண்ணார்பண்ணை வடமேற்கு இறை "முல்லைக்கொட்டையும், பன்றிககாட்டு வழவும" என்ற பெயருடைய காணி இதல் சொரியலாக மூனறில் ஒரு பங்கு 1/3 share) கிழக்கு:- செல்லப்பா குழந்தவேலுவினுடையதும் நாகலிங்கம் சுப்பையாவினுடையதும் ஆதனம. வடக்கு:- ஒழுங்கை. மேற்கு:- முதததையா கைமபெண் பொன்னம்மாவினுடைய ஆதனம தெற்கு:- நாகப்பர் இராமுப்பிளளையினுடையதும் மறுபெயர்களினுடையதும் ஆதனம்.

107, பெரியதெரு,
யாழ்ப்பாணம்,
17-7-72

எ. பி. பி. எதிர்மன்னசிங்கம்
வெந்தீஸ் கொமிஷனரும், விலைமதிப்பாளரும்.
168, 28 7-72

---

## AUCTION SALE

### கோட்டுக்கொமிஷன் விற்பனவுவிளம்பரம்

பருத்தித்துறை டிஸ்திறிக் கோட்டில் வழ இல: 11022

1. கணபதிப்பிள்ளை நடராசாவும்
2. பெண் சிவபாக்கியமும் — புலோலி கிழக்கு

— வழக்காளிகள்

எதிராக

சிவக்கொழுந்து கைம்பெண் சொர்ணபூரணம் – புலோலி கிழக்கு (புலோலி) —எதிராளி

மேற்கூறிய வழக்கில் தீர்ந்த தீர்வைப்படியும் குறித்த கோட்டால் எனககுக கிடைத்த கொமிஷின் அதிகாரப்படியுமிதன்கீழ் விபரிக்கப்படும் ஆதனத்தை 1972ம் ஆண்டு, ஓகஸ்ற் மாதம் 26ம் திகதி (26-8-72) சனிக்கிழமை முறபகல் 10.00 தொடக்கம் குறித்த ஆதனத் திடமாகவிருந்து என்னுல் பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

ஆதனத்தின் மதிக்கப்பட்ட விலை —— ரூபா 17.500/-

ஆதன விபரம்

வடமாகாணம், யாழ்ப்பாணம் டிஸ்திறிக், வடமராட்சிப்பகுதி பருத்தித்துறைக் கோயிற்பற்று, புலோலி கிழக்கு சிங்கபாகு தேவன் குறிச்சி இறை 'கலையாவோடை" நிர.30 1/8 -ஷெ வயல் நெற்பர 13. இவைகளில் தெற்கரைவாசயில தெற்குப் புறமாக நாலிலொரு பங்கும இன்னும குறித்த தெற்கரை வாசயில நடுப்பெற அரைவாசியும் குறித்த தெற்கரைவாசியில் வடக்குப்புறமாக நாலிலொரு பங்கும, இன்னும் குறித்த "கலையாவோடை" இரண்டுபிரிவுகளிலும் வடமேற்குப் புறமாக நாலிலொரு பங்கில ஐந்திலொரு பங்கும் ஒரே துண்டாயிருக்கின்றன இதற்கு ஆட்சிப்படி நிர 27. இதிற் தெற்குப் புறமாக நி. பா 6 நீக்கி மிகுதிககு நிர 21. இதற்கு 1958ம் ஆ வைகாசி மீ 28ம் திகதி உலாநதா மேஸ்தர் க. வேலமுருகுவால் 3320ம் இலக்கத்தில் விஸ்தரிக்கபபட்ட படததின்படி நி பர 20. குளி 13. இதில் குறித்த படத்தில் 1ம் நம்பர் துணடுக்கு நி.ப.ர 14. குளி 4½. இதில் தெறகுப புறமாக அரைவாசிக்கு நி.பர 7. குளி 2¼ இதில கிழக்குப் புறமாக நி பர 3 -குளி 2¼ புதிதாய் கட்டப்பட்ட கல்வீடும், பனைகளும் எல்லை கிழக்கு சங்கரப்பிளளை செகநாதனுக்குடைய ஆதனமும ஒழுங்கையும், வடக்கு குறததபடத்தில் 2ம நம்பர் துண்டும சிவசம்பு நீலகணடனுக்குடைய 1ம் நம்பர் துண்டின் வடக்கரை வாசியும மேற்கு கொடுக்கறகாரிக்குடைய மிகுதிப்பாகம், தெற்கு சங்கரப்பிள்ளை செல்வவிநாயகததுக்குடைய ஆதனம், இவ்வெல்லைக்குட் பட்டவை அடங்கலும், கிணறறுக்கும் அதன் பாவிப்புக்குமாக விடப்பட்ட குளி 5 கொண்ட குறிதத படததில் 3ம் நம்பர் துண்டிலும் வழிவாய்க்காலுக்காக விடபபட்ட குளி 3½ கொண்ட குறித்த படத்தல 4 நம்பர் துண்டிலும பங்கும்.

| | | |
|---|---|---|
| தீர்வைத்தொகை: ரூபா | 5412 | 50 |
| 17-8-70 தொடக்கம் 10-2-71 வரை ரூபாய் 3000/-க்கு 10 வீத வட்டி | 145 | 48 |
| | 5557 | 98 |
| 11-2-71 தொடக்கம் 10-8-71 வரை ரூபாய் 5557-98க்கு 5 வீத வட்டி | 138 | 95 |
| | 5696 | 93 |
| 10-8-71 கொடுபட்ட தொகை | 1500 | 00 |
| | 4196 | 93 |
| 11-8-71 தொடக்கம் 26-8-72 வரை ரூபாய் 4196 93க்கு 5 வீத வட்டி | 218 | 59 |
| கோட்டுச்செலவு — | 319 | 54 |
| | 4735 | 06 |
| கோட்டுச்செலவில் கொடுபட்ட தொகை | 150 | 00 |
| கொடுபடவேண்டிய தொகை: | 4585 | 06 |

புலோலி மேற்கு
புலோலி. 12-7.72

க. நா. சுப்பிரமணியம்
கொமிஷனர், விலைமதிப்பாளர்
161 - 72

---

### கோட்டு விற்பனவு விளம்பரம்

யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கோட்டில்

அல்லைப்பிட்டி 1. சேதுபதி சிவயோகசுந்தரமும் பெண்
2. நாகமணியும் —வழக்காளிகள்

வழ. இல: M B 12188 எதிராக

அல்லைப்பிட்டி அருளர்பலம் வெல்லிபுரநாதன் —எதிராளி

யாழ்ப்பாணம் டிஸ்திறிக கோட்டின் M B 12188ம் இலக்க வழககில ஏனக்குக் கிடைதத கோட்டுக்கட்டளைப்படி பினனல் விபரிககப்படும இரண்டு துண்டுக்காணிகளை 1972ம் ஆண்டு ஆவணி மாதம் 30ம திகதி (30-8-72) புதன்கிழமை முற்பகல் 10-30 மணி தொடக்கம் அந்தந்தக்காணிகளுககுள் நின்று பிரசித்த ஏலத்தில் என்னுல் விற்கப்படும.

தீர்வைத்தொகை:- ரூபாய் 1800/-ம் 15-12-70 தொடக்கம் 10—8 71 வரைககும் ரூபாய் 1000/-க்கு 12 வீத வட்டியும் அதன்பின் முழுத்தீர்வைத்தொகைக்கும் பணம் முற்ருக இறுபடும் வரைக்கும் 5 வீத வட்டியும், கோட்டுச்செலவு ரூபா 318-16 சதமும்

ஆதன விபரம்

1. வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் தீவுப் பகுதி அல்லைப்பிட்டி கோவிற்பற்று அல்லைப்பிட்டி இறை "பிரப்பந்தாழ்வு" (Pirappanthalvu) நிலப்பரப்பு 10 எல்லை கிழக்கு முருகப்பர் செலலததுரைககும பெண் தெய்வானைப்பிள்ளைக்குமுரிய ஆதனம், வடக்கு திருஞானசம்பந்தருக்கும் பெண் தையல்நாயகிககுமுரிய ஆதனம, மேற்கு சிவசம்பு பெண் நாகம்மாவின் ஆதனம, தெற்கு இக்காணியிற ஆறுமுகம் பெண் அகிலாண்டத்தின் பங்கு. இதடங்கலும்.

2. ஷெ அல்லைப்பிட்டி இறை 'குதிரைமுறிந்த அடைப்பு' (Kuthiraimurintha adaippu) நிலப்பரப்பு 75 எல்லை கிழக்கு அல்லைபபிட்டி சரிவப்பிள்ளையார் கோவிலாதனம், வடக்கும் மேற்கும் முடிக்குரிய காணி தெற்கு ரேட்டு இதடங்கலும்.

மல்லாகம்.
22-7-72.

செ. பாண்டித்துரை
கொமிஷனர், விலைமதிப்பாளர்,
172 28—7—72

## மாணிக்கவாசக......

**1-ஆம் பக்கத்தின் வளர்ச்சி**

ருவதாகப் பேசிய வேம்படி மகளிர் உயர்நிலைப்பள்ளி மாணவி செல்வி சிவநாயகி கந்தையா திருவெம்பாவை" எனும் பொருள் பற்றிச் சிலவார்த்தைகள் கூறினார். பாவை நோன்பை எடுத்துக்காட்டும் திருவெம்பாவையைப்பற்றி ஒரு பெண் பேசுவதுமிகப் பொருத்தம் என்பதை அவர் எடுத்துக் காட்டினார். 'திருவண்ணாமலையிற் கன்னிப் பெண்கள் பனி நிறைந்த மார்கழி மாதத்தில் அதிகாலையிற் குளிர்ந்த நீரிற்துளிந்து இறைவனை வழிபட்டனர், இக காட்சியைக் கண்ட மாணிக்கவாசகர் அப் பெண்கள் முறையாக ஒருவரையொருவர் துயிலெழுப்புவதை இப் பகுதியில் அழகாகக் கூறியுள்ளார்.

நல்லமழை பெய்ய வேண்டுமென்று அப் பெண்கள் வேண்டுவதிற் பொதுப் பயனையும், சிவப் பணி செய்பவரே தமக்குக் கணவாக வாய்க்க வேண்டும் என்பதிற் சிறப்புப் பயனையும் உணரலாம். 'குடைந்து உன்கழல பாடி" என்று பாடியே அப்பெண்கள நீந்தினர்கள். இவ்வாறு சீதப்புனல் ஆடி, சிற்றம்பலம் பாடிப் பிறவியெனும் வெப்பு நோயைத் தீர்த்துக் கொள்ளலாம். தீர்த்தனும சிவபெருமானில் நாம் மூழ்கிப் பிறவிப் பிணியை அகற்றுவோமாக' என்று கூறிய இமயாணவி 'அண்ணாமலையான்' என்று தொடங்கும திருவெம்பாவைப் பாடலையும் இனிமையாகப் பாடினர்.

---

சுங்கத் திணைக்கள

## இந்து ஊழியர்சங்கம்

**இச் சங்கத்தின் நாலாவதாண்டு வருடாந்த அறிக்கையும் வரவுசெலவுக்கணக்கும் ஏற்பெற்றேம். இச் சங்கம் திருமலை வில்லூன்றிப் பிள்ளையார் கோவில் உற்சவத்துக்கு உதவிபுரிந்து வருகிறது கலை மகள் விழா பஜனை முதலிய சமயத் தொண்டுகளைப் புரிவதோடு திருக்கேதீச்சரத்திருப்பணி முதலிய சிவ தொண்டுகளுக்கும் உதவி செய்து வருகின்றது.**

### கால்நடைப் பண்ணை

பரந்தனில் விவசாய கால் கால்நடை பண்ணையொன்று அமைக்கப்படவிருககின்றது. இந்தப் பண்ணை 50 ஏக்கர் நிலத்தில் அமையும்.

### மூவாயிரம் ஏக்கர் நிலம்

படித்த இளைஞர்களுக்கென விசுவமடுப் பகுதியில, மூவாயிரம ஏக்கர் நிலம் குடியேற்றத்திட்டத்துக்கெனத் தயார் செய்யப்பட்டுள்ளது.

### போட்டி

செப்டெம்பர்மாதம் 1ம் திகதியன்று யாழ். மாவட்ட பாடசாலைகளுக்கான நடன, நாடக, சங்கீதப்போட்டியொன்று நடைபெறவிருக்கின்றது. வடபகுதி கல்வித் திணைக்களத்தினர் சகல ஏற்பாடுகளையும கவனித்து வருகின்றனர்.

---

### கோட்டு விற்பனவு விளம்பரம்

வழ. இல. M. B 8436

சண்டிலிப்பாய் மாகியப்பிட்டி மட்டுப்படுத்தப்பட்ட பலநோககுக் கூட்டுறவுச் சங்கம் சண்டிலிப்பாய் —வழக்காளி

எதிராக

1) தலத்துங்கம் அரசகுலசிங்கமும
(2)நாகன் கந்தையாவும் இருவரும் சண்டிலிப்பாய்
—எதிராளி

யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கோட்டின M B 8436-ம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி பின்னுல் விபரிக்கப்படும ஒரு துண்டுக் காணியை 1972-ஆம் ஆவணி மாதம 29 - ஆம திகதி (29-8 72) செவ்வாய்க் கிழமை முற்பகல் 10-30 மணி தொடக்கம அந்தக் காணிக்குள நின்று என்னல் பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

தீர்வைத் தொகை:- முதல்வட்டி ரூபா 2195/-ம் 7-9-66 தொடககம 27-6-68 வரைக்கும் ரூபா 1700/- க்கு 4 வீத வட்டியும அதன்பின் முழுத் தொகைக்கும் இறுக்கும் வரை 5 வீத வட்டியும் கோட்டுச் செலவு ரூபா 293-10 சதம்.

**ஆதன விபரம்**

வடமாகாணம யாழ்ப்பாணம் டிஸ்திறிக் வலிகாமம் மேற்குப் பிரிவு மானிப்பாய் கோவிற்பற்று சண்டிலிப்பாய் இறை 'இங்கிரத தோட்டம கொலலன் தோட்டமும் செம்பியன்வளவு' நி. பர மூன்றேகால் பரப்பு வானபயிர் செய்பயிர்கொண்ட ஆதனம். இதற்கு எல்லைகிழக்கு சின்னத்தம்பி சபாபதியின் மனைவி அன்னத்தின் ஆதனம். வடக்கு நாதன் சோமனதும், கை ஒழுங்கையும மேறகு ஐயன் நாகனதும் கையொழுங்கையும், தெற்கு பெரியன் கணபதியினதும் ஆதனம். இது அடங்கலும் அதைச் சேர்ந்தவைகளும். யாழப்பாண காணிக் கந்தோர் பதிவு இலக்கம E 206/275

சி செ. பாலசிங்கம்
*கொமிசனரும்விலைமதிப்பாளரும்*
*அராலி வடக்கு,*
*வட்டுக்கோட்டை,*
14-7-72 1 2 72

---

### கோட்டு விற்பனவு விளம்பரம்

யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கோட்டில் இல. M B 11714

யாழ்ப்பாணம நல்லூர் வேலுப்பிள்ளை சின்னத்துரை கைம்பெண் நாகம்மாவும் — மற்றும் 3 பேரும —வழக்காளிகள

எதிராக

கோப்பாய் வடக்கு, கோப்பாய்
1. வள்ளி மயிலுவும்
2. பெண் சின்னக்குட்டியும்
3 சந்தன் மகள் இலட்சுமியும். — எதிராளிகள்

யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கோட்டின் M B 11714-ம இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி, பின்னுல் விபரிக்கப்படும் 2 துண்டுக் காணிகளை, 1972-ம் ஆண்டு ஆவணி மாதம 16-ந் திகதி புதன்கிழமை முற்பகல் 10 மணி தொடக்கம அந்தந்தக் காணிகளுக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும.

தீர்வைத் தொகை: முதல் வட்டி ரூபாய் 4116/-ம் 25 5-70 தொடக்கம் 2-10-70 வரைக்கும ரூபாய் 2100/-க்கு 12 வீத வட்டியும் அதன்பின் முழுத்தொகைக்கும இறுக்கும் வரை 5 வீத வட்டியும் கோட்டுச் செலவு ரூபாய் 357-95.

**ஆதன விபரம்**

1 வடமாகாணம் யாழ்ப்பாணம டிஸ்திறிக் வலிகாமம் கிழக்குப் பகுதி கோப்பாய் கோவிற்பற்று கோப்பாய் தெற்கு இறை 'கொப்பிலாவத்தை" நில. பர. 28¼. கல்வீடும், வீடுகளும் பனைகள், தென்னங் கன்றுகளும் செய்பயிர் வான்பயிர்களும் கிணறும் இதற்கெல்லை கிழக்கு முடிக்குரிய சந்தைக் காணிகள. வடக்கு நாமுத்து நடராசாவுககும் மறுபேருக்குரிய ஆதனங்கள். மேற்கு ஒழுங்கை. தெற்கு கதிரன கைம்பெண் பொன்னிககும் பங்காளருக்கும மறுபேருக்குமுரிய காணி. இதில சொரியலாய் 5, 2 /40 நில. பரப்பும கல்வீடும். இதைச் சேர்ந்தவைகளும ஆனல் பற்ற வீடுகள பிற நீங்கலாக பதிவு. இல. K 228 285.

2, மேற்படி "கொப்பிலாவத்தை" நில பர. 28½ கல் வீடும. வீடுகளும, பனைகளும, தென்னைகளும், செய்பயிர், வானபயிகளும் இதற்கெல்லை கிழக்கு முடிக்குரிய சந்தைக காணி வடக்கு நாமுத்து நடராசாவுக்கும் மறுபேருக்குமுரிய காணி மேற்கு ஒழுங்கை. தெற்கு கதிரன் கைம்பெண் பொன்னிககும் பங்காளருக்குமுரிய காணி, குறித்த வீடுகள் புற நீங்கலாக இதடங்கலிற சொரியலாய் 1/12-ம் இதைச் சேர்ந்தவைகளும் பதிவு இல K 223/285.

46. 3-ம குறுக்குத்தெரு, இ சு. தர்மரத்தினம்
யாழ்ப்பாணம கொமிஷனர், விலைமதிப்பாளர்
28-7-72 178

---

### கோட்டு விற்பனவு விளம்பரம்

யாழ்ப்பாண மாவட்டக் கோடில்

தெல்லிப்பளை கிழக்கைச் சேர்ந்த
கந்தையா சுப்பையா — வழக்காளி

வழ. இல. M. B. 11789 எதிராக

தற்பொழுது காங்கேசன்துறை தையிட்டியில் வசிக்கும் உடுவிலைச் சேர்ந்த வைத்திலிங்கம் சுப்பிரமணியம் — எதிராளி

யாழ்ப்பாண மாவட்ட நீதிமன்றத்தின M. B. 11789-ம இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி பின்னுல் விபரிக்கப்படும் 4 துண்டுக் காணிகளில், முரசுமூட்டையில் உள்ள மூன்று துண்டுக்காணிகள் 1972-ம ஆண்டு புரட்டாதி மாதம 1-ம் திகதி (1-9-72) வெள்ளிககிழமை பி. ப. 4-30 மணி தொடக்கமும், மயிலிட்டியில் உள்ள ஒரு துண்டுக் காணி 1972-ம் ஆண்டு புரட்டாதி மாதம 2ம் திகதி (2-9-72) சனிககிழமை முற்பகல் 10-30 மணி தொடக்கமும் என்னுல அக்காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

தீர்வைத் தொகை: முதலும் வட்டியும் ரூபா 28,000/- மேற்கொண்டு ரூபா 20.000/- க்கும் 23-6-72 தொடககம 24-9-71 வரைக்கும் 12 வீத வட்டியும் அதன்பின முழுத தொகைக்கும் இறுக்கும் வரை 5 வீத வட்டியும் கோட்டுச் செலவு ரூபா 709-86 சதமும ஆகும.

**ஆதன விபரம்**

1. வடமாகாணம், யாழ்ப்பாண மாவட்டம். பளைப் பிரிவு பரந்தன் கோவில் பற்று முரசுமூட்டையில் உள்ள "முரசுமூட்டைக்காடு" என்றழைக்கப்படும் நிலப் பரப்பு 1 ரூட்டும் 13 பேர்ச்சும். எல்லை கிழக்கு வாய்க்காலுக்கு ஒதுக்கப்பட்ட காணியும், எல்லை வடக்கும் மேற்கும் ரோட்டும். எல்லை தெற்கு T.P. இல. 399348-ம் உள்ளன. இது முழுவதிலும் எல்லைகள இலக்கம் L: 1/31-ல் பதிவு செய்யப்பட்டுள்ளன.

2. மேற்கூறியபடி "முரசுமூட்டைக்காடு" என்றழைக்கப்படும் நிலப்பரப்பு 2 ரூட்டும் 1 பேர்ச்சும் அதனைச் சேர்ந்த செய்பயிர்களும்.

எல்லை கிழக்கும் வடக்கும் மேற்கும் வாய்க்காலும் எல்லை தெற்கில் விஞசித்தம்பி கந்தையாவின் ஆதனமும உள்ளன இலக்கம L. 1/32-ல் பதியப்பட்டுள்ளது.

3- மேற்கூறியபடி "முரசுமூட்டைக்காடு" என்றழைக்கப்படும் நிலப்பரப்பு 2 ஏக்கர் 1 ரூட், 9 பேர்ச்சும்,

எல்லை கிழக்கும வடக்கும் ரோட்டும் எல்லை. மேற்கு வாய்க்காலும் எல்லை தெற்கு T .P. 399348-ம இலக்கம் இவை முழுவதிலும் பிரிக்கப்படாதது 1 ஏக்கர் 3 ரூட் 8 பேர்ச்சஸ் என L 1/33 இல் பதியப்பட்டுள்ளது.

4. வடமாகாணம் யாழப்பாணம் மாவட்டம் வலிகாமம் வடக்கு மயிலிட்டி கோவிற்பற்று மயிலிட்டிலுள்ள 'இத்தியடி' என்றழைககப்படும நிலப்பரப்பு 9ம் அதனைச் சேர்ந்த வீடும் கிணறும் செய்பயிர்களும் பனைகளும உள்ளன.

எல்லை கிழக்கு ஆழ்வாப்பிள்ளை விஞாயகமூர்த்தியின் ஆதனமும் எல்லை வடக்கு ரோட்டும், எல்லை மேற்கு சின்னத்தம்பி கதிரனின் ஆதனமும், எல்லை தெற்கு கதிரேசு சின்னப்புவின் வாரிசாளர்களின ஆதனமும் உள்ளன. இவற்றைவிட மேற்குறிப்பிட்ட எல்லைகளுக்கிடையில் பிரிக்கப்படாத அரைப்பங்கு வானபயிர்களுடன் உண்டென H 322/236 ல் பதியப்பட்டுள்ளது.

"வடிவேல் உதயம்" சி. ஆ. த. வடிவேலு, J. P.
காங்கேசன்துறைவீதி, கொமிஷனரும் விலைமதிப்பாளரும்,
கோண்டாவில, ஏல விற்பனையாளரும்.
18-7-72. எம் 182-28-7

---

### கோட்டு விற்பனவு விளம்பரம்

இல: M B 11794

வைரவன் ஐயாத்துரை
ஆவரங்கால —வழக்காளி

எதிராக

1. வல்லி முருகன் (இறந்துவிட்ட) 2 பெண் வயிரவி இருவரும் புத்தூர். முதலாம எதிரி தனக்காகவும், தன து காலஞ்சென்ற மனைவியின ஆதனத்திற்குச் சட்டப்படி பிரதிநிதியாகவும். — எதிராளி

யாழப்பாணம் டிஸ்திறிக் கோட்டின் M B 11794 ம இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி பின்னுல விபரிக்கப்படும் ஒரு துண்டுக் காணியை 1972 - ஆம் ஆவணி மாதம் 23-ம் திகதி (23-8-72) புதன்கிழமை முற பகல் 10மணிதொடககம் அந்தக் காணிக்குள் நின்று எனனுல் பிரசித்த ஏலத்தில் விற்கப்படும.

தீர்வைத்தொகை: முதல்வட்டி ரூபா 1840/-க்கு 8-6-70 தொடக்கம 15-12-71 வரைக்கும ரூபாய் 1000/-க்கு 12 வீத வட்டியும் அதன்பின முழுத்தொகைக்கும இறுக்கும்வரை 5 வீத வட்டியும கோட்டுச் செலவு ரூபா 385-76

**ஆதன விபரம்**

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் வலிகாமம் கிழக்குப் பகுதி புத்தூர் கோவிற்பற்று புத்தூர் வடக்கு இறை ஆரந்தனை (Aran'hanai) பரப்பு நில லாச்சம் 4 இதற்கு எல்லைகிழக்கு வட்டன் முருகனுக்கும் பங்காளருக்குமுரிய ஆதனம். வடக்கு பொன்னம்பலம் மகன் மாரிமுத்துவுக்கும் பங்காளருக்குமுரிய ஆதனம, மேற்கும் தெறகும் வீரகத்தி இளையவனுக்கும் பங்காளருக்குரிய ஆதனம, இதில் சொரியலாய் அரைவாசிப் பங்கும் மேற்கு எல்லைக் காணியில் இருக்கும் கிணற்றில் பங்கும் வழி வாய்க்காலும

மு. நவரத்தினராசா
*கொமிசனர் & விலை மதிப்பாளர்;*
"கமலபதி"
மண்டைதீவு, 184 - 7-72

---

### கோட்டு விற்பனவு விளம்பரம்

வழக்கு இல: M. B. 10721

பொன்னையா சிவகுருநாதர், வட்டுக்கோட்டை கிழக்கு — வழக்காளி

எதிராக

1. புன்னுலை அன்னலிங்கமும் 2.பெண் பேபி அம்மாள்
இருவரும வட்டுககோட்டை கிழககு, —எதிராளிகள்

யாழ்ப்பாணம டிஸ்திறிக கோட்டின் M B 10721ம இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி பினனுல் விபரிககப்படும ஒருதுண்டுக் காணியை 1972-ம் ஆண்டு புரட்டாசி மாதம்4ந் திகதி (4-9-72) திங்கட்கிழமை முற் பகல் 10 மணி தொடக்கம் அந்தக்காணிக்குள் நின்றுபிரசித்த ஏலததில் விறகப்படும்.

தீர்வைத்தொகை: முதல் வட்டி ரூபாய் 661/-ம் 27-3 69 தொடக்கம் 28-7-70 வரைககும் ரூபாய் 4000/-கககு 10 வீதவட்டியும் அதனபின் முழுததொகைககும் இறுககும் வரை 5வீத வட்டியும கோட்டுசசெலவு ரூபாய் 388 சதம் 75

**ஆதன விபரம**

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் வலிகாமம் மேற்கு வட்டுக்கோட்டை கோவிறபற்று வட்டுககோட்டை கிழக்கு இறை 'பெரியவளவு' பர. நில. இலா 1 குளி 15ம வீடும, வானபயிர் செய்பயிர்களும் இதற்கு கிழக்கு ஒழுங்கை, வடககு முருகேசு நடராவிறகும பங்காளருக்குமுரிய ஆதனம, மேற்கு கதிரேசு வைரமுத்துவினுடைய ஆதனம, தெற்கு இராமசாமி கந்தசாமியினுடைய ஆதனம, யாழ்ப்பாணம பதிவுக கந்தோரில E: 328/98 இலக்கத்தில் பதியப்பட்டது.

எ. பி. பி. எதிர்மன்னசிங்கம்
107, பெரியதெரு, வெந்தீஸ் கொமிஷனர், விலைமதிப்பாளர்
யாழ்ப்பாணம். 17-7-72 169; 28-7

---

### யாழ். கோட்டை முனீஸ்வரர் மணவாளக்கோல உற்சவம்

யாழ் கோட்டை, ஸ்ரீ முனீஸ்வரன் தேவஸ்தான மணவாளக் கோல சங்காபிஷேக உற்சவத் தினபதினேராவது நாளன்று அளவையூர் அருட்கவி சி. விநாசித்தம்பி அவர்கள 'திருமுறைச் செல்வம்' என்னும் பொருளபற்றி சங்கீத கதாப்பிரசங்கம் செய்தார்.

—0—

---

**வான்முகில் வழாதுபெய்க, மலிவளஞ் சுரக்க மன்னன்
கோன்முறை அரசுசெய்க குறைவிலாது உயிர்கள் வாழ்க
நான்மறை அறங்கள் ஓங்க நற்றவம் வேள்வி மல்க
மேன்மைகொள் சைவ நீதி விளங்குக உலகமெல்லாம்**

யாழ்ப்பாணம் சைவபரிபாலன சபையாருக்காக, வண்ணார்பண்ணை காங்கேசன்துறைவீதி 450-ம் இலக்கத்திலுள்ள சைவப்பிரகாச யந்திரசாலையில், 2 ம் நம் இரண்டாமொழுங்கை பிறவுன் வீதியில் வசிக்கும் திரு. மு. மயில்வாகனம் அவர்களால் 28—7—1972 வெள்ளிக்கிழமை அச்சிட்டு வெளியிடப்பெற்றது.
பத்திராதிபர்: திரு. மு. மயில்வாகனம் அவர்கள்